பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 17 திங்கட்கிழமை 02.11.2020 கதிர் 228

## ரயிலுடன் மோதி குடும்பஸ்தர் பலி

எலுவன்குளம் - அருவக்காடு பகுதியில் ரயிலுடன் மோதுண்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இன்று அதிகாலை சுண்ணாம்புக்கல் சுமந்து சென்ற ரயிலுடன் மோதுண்டே இவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் வனாத்தவில்லு பகுதியைச் சேர்ந்த

2

# ஊடகவியலாளர்களுக்கு எதிரான அநீதிகள்: விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு தேவை!

### சுதந்திர ஊடக இயக்கம் வலியுறுத்து

ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு நீதி வழங்குவது ஒவ்வொரு அரசினதும் பொறுப்பாக இருந்தாலும், இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான எந்தவொரு குற்றத்துக்கும் நீதி வழங்கப்படாத வரலாறே காணப்படுகின்றது.

- இவ்வாறு சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

நவம்பர் 2ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்ற ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனை விலக்கை ஒழிப்பதற்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு சுதந்திர ஊடக இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது:-

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக அதிக எண்ணிக்கையிலான குற்றங்கள் இடம்பெற்ற காலகட்டத்தில் ஆட்சியில் இருந்த அரசே தற்போதும் ஆட்சியில் இருக்கின்றது.

இந்தநிலையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்து நீதியான விசாரணைகள்

2

## பொம்பியோ தங்கிய நட்சத்திர விடுதியின் 2 ஊழியருக்குத் தொற்று

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த வந்த அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ கொழும்பில் ஒரு நட்சத்திர விடுதி ஒன்றில் தங்கியிருந்தார்.

இவர் தங்கியிருந்த விடுதியில் பணியாற்றிய இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

2

## பொரளை பொலிஸில் 9 பேருக்குத் தொற்று

கொழும்பு, பொரளை பொலிஸ் நிலையத்தில் மேலும் ஒன்பது பொலிஸார் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

நேற்று நடத்தப்பட்ட பி.சி.ஆர். சோதனைகளின் முடிவுகளின் அடிப்படையிலேயே இவர்கள் கொரோனா தொற்றுக்குள்ளானமை கண்டறியப்பட்டுள்ளது.

2

# வடக்கில் 2 நாள்கள் எவருக்கும் கொரோனாத் தொற்று இல்லை


### 59 நோயாளிகள் இதுவரை அடையாளம் என்கிறார் சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்

**கொழும்பு, நவம்பர் 02**

**இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று ஆரம்பித்த மார்ச் மாதத்தில் இருந்து இதுவரை வடக்கு மாகாணத்தில் 59 கொரோனா நோயாளிகள் இனங் காணப்பட்டுள்ளனர்.**

**- இவ்வாறு வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

2



# வடக்கில் கொரோனாவுக்கு முடிவுகட்ட தீவிர நடவடிக்கை

### கடற்படையினர் விசேட ரோந்து என்கிறார் ஆளுநர்

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான தீவிர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. விசேடமாக வடக்கு மாகாணத்தினுள் கடற்பரப்பின் ஊடாக அத்துமீறி நுழைபவர்களைத் தடுப்பதற்காகக் கடற்படையினர் விசேட ரோந்துப்

2



# வரவு பதிவு செய்யும் கருவி மூலம் கொரோனா பரவும் என்று அச்சம்!

### அரச உத்தியோகத்தர்கள் கவலை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். மாவட்டத்திலுள்ள அரச அலுவலகங்களில் உத்தியோகத்தர்களின் வரவைப் பதிவு செய்வதற்குத் தற்போதும் கைவிரல் அடையாளம் பதிவு செய்யும் கருவி பயன்படுத்தப்படுவது குறித்து உத்தியோகத்தர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் அதிகமாகப் பரவி வரும் நிலையில் இவ்வாறான கைவிரல் அடையாளம் பதிவு செய்தல் தமக்குப் பாதிப்பாக அமைகின்றது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

யாராவது ஓர் உத்தியோகத்தருக்குக் கொரோனாத் தொற்று இருக்கும் பட்சத்தில் அது அனைவரையும் பாதிக்கும் எனவும் அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

2

## இந்தியத் தூதர ஊழியருக்கும் கொரோனா

இந்தியத் தூதரகத்தின் ஊழியர் ஒருவர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தின் துணைப் பணியாளரே கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளார்.

தற்போது அவர் இலங்கை அரசால் ஒதுக்கப்பட்ட பகுதியில் மருத்துவ சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட ஊழியரின் பணி காரணமாக அவர் தூதரக

2

## 'கொரோனா' நோயாளி தற்கொலை!

### 22ஆவது மரணம் எனப் பதிவு; சுகாதார அதிகாரிகள் விளக்கம்

இலங்கையில் கொரோனா வைரஸ் மரணம் 22 ஆக உயர்வடைந்துள்ளது.

போதைப்பொருக்கு அடிமையான 27 வயதுடைய இளைஞர் ஒருவர், நோய் அறிகுறிகளுடன் கடந்த 31ஆம் திகதி பாணந்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தபோது வைத்தியசாலைக்குள்ளேயே தற்கொலை செய்துகொண்டிருந்தார்.

இவருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது பிரேத பரிசோதனையின்போது உறுதிசெய்யப்பட்ட நிலையில், இவரின் உயிரிழப்பை நாட்டில் கொரோனாவால் ஏற்பட்ட 22 ஆவது உயிரிழப்பாக சுகாதார அதிகாரிகள் அறிவித்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த இளைஞர் தற்கொலை காரணமாகவே உயிரிழந்துள்ள நிலையில், அதனை எப்படி கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட உயிரிழப்பு எண்ணிக்கையுடன் சேர்க்க முடியும் என்று பல்வேறு தரப்பினர் கேள்விகளை எழுப்பி வருகின்றனர்.

2

நாளை முதல்

காலைக்கதிர்

Kalaikkathir

காலை இதழில்

ஆஸ்திரேலியாவிலிருந்து

**சிரேஷ்ட சட்டத்தரணி செ. ரவீந்திரன்**

(தமிழர் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் - TRRO)

வரையும் பட்டறிவுப் பகிர்வு

பல அனுபவப் பகிர்வுகளுடனான நிகழ்வுகளின் பதிவு

புதிய தொடராக...

'இலங்கை - இந்திய ஒப்பந்தம்; ஒரு வரலாற்றின் திசை நோக்கு'

உங்கள் பிரதியைச் சேகரித்து தவறாது வாசித்துப் பயனடையுங்கள்!

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



## வடக்கில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார். இது தொடர்பில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடலோரப் பாதுகாப்பையும் கடந்து யாராவது அத்துமீறி உள்நுழைவார்களாயின் அல்லது உள்நுழைந்து மறைந்திருப்பார்களாயின் கரையோர வாழ் வட பிராந்திய மக்கள் உட்பட யாரும் அருகில் உள்ள பொதுச்சுகாதார அதிகாரிகளிடத்திலோ அல்லது பொலிஸ் நிலையத்துக்கோ தகவல் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

அத்துடன் அண்மைய நாள்களில் வெளிமாவட்டங்களிலிருந்து வருகை தந்தவர்கள் தங்களைத் தாங்களே வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்குவது அவசியமாகின்றது. அதுமட்டுமன்றி அவர்களின் உடல்நிலையில் மாறுபட்ட அடையாளங்களை காணுமிடத்து உடனடியாக வைத்திய பரிசோதனைகளுக்குத் தங்களை ஈடுபடுத்தவதே பொருத்தமானதாகும்.

யாழ். போதனா வைத்தியசாலையிலும், யாழ்.பல்கலைக்கழகத்திலும், பி.சி.ஆர். பரிசோதனைகள் கிரமமாக மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே பொதுமக்கள் இயல்பான சந்தேகங்கள் ஏற்படுமிடத்து எவ்விதமான அச்சமும் அடையாது பரிசோதனைகளுக்கு தங்களை உட்படுத்திக் கொள்ள முடியும்.

இதைவிட, அனைத்துப் பொதுமக்களும் பொதுவெளியில் நடமாடுவதை இயன்றளவில் தவிர்ப்பதுடன், முகக் கவசம் அணிதல், கை சுத்திகரிப்பு திரவததை பயன்படுத்தல், சமூக இடைவெளிகளைப் பேணுதல் ஆகிய மூன்று விடயங்களையும் பின்பற்றுதலும் அவசியமானதாகின்றது.

சமூகப் பொறுப்புடன் வடக்கு வாழ் ஒவ்வொரு பிரஜைகளும் நடந்து கொள்வதுடன் மக்கள் கூடும் இடங்களில் பொலிஸார் மற்றும் பொதுசுகாதரப் பணியாளர்கள் விசேட கவனம் கொண்டிருப்பதும் அவசியமாகின்றது. அதற்குரிய அறிவுத்தல்களையும் நான் வழங்கியுள்ளேன்.

மங்கல, அமங்கல நிகழ்வுகளின் போது வரையறுக்கப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றுவ அவசியமாகின்றது. அத்துடன் அத்தியாவசியப் பொருள்களுக்குத் திட்டமிட்டு தட்டுப்பாடுகளை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக பாரபட்சமின்றிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது முக்கியமான விடயமாகின்றது. -என்றுள்ளது.

## இந்தியத் தூதர .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அலுவலகத்துடனும் அதிகாரிகளுடனும் சிறியளவுக்கே தொடர்பில் இருந்தார் எனத் தெரிவித்துள்ள தூதரகம், அவருடன் தொடர்பிலிருந்த மிகக் குறைந்த எண்ணிக்கையிலானவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளது.

இலங்கையில் உருவாகி வந்த சூழ்நிலை காரணமாக தூதரகம் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான ஊழியர்களுடனேயே சில வாரங்களாக இயங்கி வருகின்றது எனவும் தூதரகம் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

## 'கொரோனா' நோயாளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பாக தெளிவுப்படுத்தியுள்ள சுகாதார அதிகாரிகள் இலங்கையில் கொரோனா தொடர்பான மரணங்கள் இரண்டு வகைகளின் அடிப்படையில் பதிவு செய்யப்படுகின்றன என்று சுட்டிக் காட்டியுள்ளனர்.

நேரடியான கொரோனா தொடர்பான மரணங்கள் மற்றும் மறைமுகமான கொரோனா தொடர்பான மரணங்கள் என இவை வகைப்படுத்தப்பட்டுள்ளன என்று தொற்று நோயியல் ஆய்வுப் பிரிவின் தலைமை வைத்திய நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட ஒருவர், சிகிச்சையளிக்கப்படும்போது உயிரிழந்தால் அது நேரடியான கொரோனா மரணத்துடன் தொடர்புடையது. மறைமுகமான கொரோனா வைரஸ் தொடர்பான மரணம் எனும்போது, விபத்து அல்லது தற்கொலை போன்ற பிற காரணங்களால் இறந்த ஒருவர், பிரேத பரிசோதனையின் போது நடத்தப்பட்ட பி.சி.ஆர். சோதனைகளைத் தொடர்ந்து வைரஸ் பாதிப்பு உறுதிப்படுத்தப்படுவதைக் குறிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வரவு பதிவு செய்யும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடந்த போர்க்காலத்தில்கூட எந்தவித அச்சமும் இன்றி நாம் பணியாற்றினோம். அப்போது வரவுப் பதிவேடு மாத்திரமே இருந்தது. நிர்வாக உத்தியோகத்தர்கள் காலை 9 மணிக்கும் மதியம் 12.30 மணிக்கும் சிவப்பு அடிக்கோடிடுவர். இதன் மூலம் நேர்த்தியாக வரவு பதிவு செய்யப்பட்டது எனவும் உத்தியோகத்தர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கொரோனா வைரஸ் தொற்று கட்டுப்படுத்தப்படும் வரை கைவிரல் அடையாளம் பதிவு செய்யும் இயந்திரங்களை நிறுத்திவைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வடக்கில் 2 நாள்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வடக்கு மாகாணத்தில் தற்போதைய நிலைமை தொடர்பில் ஊடகங்களுக்கு இன்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் மார்ச் முதல் செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் 18 நோயாளர்களும், ஒக்டோபர் மாதத்தில் 41 நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய ஒக்டோபர் மாதத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 15 தொற்றாளர்களும், வவுனியா மாவட்டத்தில் 14 தொற்றாளர்களும், மன்னார் மாவட்டத்தில் 10 தொற்றாளர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளார்கள்.

கடந்த இரண்டு நாள்களில் வடக்கு மாகாணத்தில் புதிதாக எவரும் தொற்றுக்கு உள்ளாகவில்லை.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படுகின்ற பி.சி.ஆர். பரிசோதனைகளில் நேற்றுமுன்தினம் 378 பேரிடம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. நேற்று 385 பேரிடம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதிலே தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்த வெளிமாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கும், சிகிச்சை நிலையத்தில் இருந்த சிலருக்கும் மட்டுமே கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. புதிதாக வடக்கு மாகாணத்தில் எவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை.

இருந்தாலும் கடந்த வாரத்தில் இனங்காணப்பட்ட நோயாளர்களுடன் நேரடித் தொடர்பில் இருந்தவர்களை இனங்கண்டு அவர்களைத் தனிமைப்படுத்தி அவர்களுக்கான பரிசோதனைகளையும் தற்போது மேற்கொண்டு வருகின்றோம்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரைக்கும் யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட பாசையூர் மேற்கு, திருநகர் மற்றும் கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட இராஜகிராமம் ஆகிய 3 கிராமங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மருதங்கேணி கொரோனா சிகிச்சை நிலையம் கடந்த மாதம் 19ஆம் திகதி முதல் இயங்க ஆரம்பித்திருந்தது. 50 நோயாளிகள் சிகிச்சை பெற்று வந்திருந்தார்கள். இவர்களில் முதலாவது தொகுதியாக 16 பேர் இரண்டு வார கால சிகிச்சை நிறைவு செய்து இன்று தங்களுடைய வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்கள்.

அதேபோல் கிளிநொச்சியில் கிருஷ்ணபுரத்திலும், முல்லைத்தீவில் மாங்குளத்திலும் இந்த வாரத்தில் சிகிச்சை நிலையங்கள் இயங்க ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது இலங்கை முழுவதும் இந்தக் கொரோனாத் தொற்று மிகத் தீவிரமாகப் பரவி வருவதை நாங்கள் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. தற்போது பரவி வருகின்ற இந்த வைரஸ் மிகவும் வீரியம் மிக்கது. அதன் தாக்கமும் அதிகமாகக் காணப்படுகின்றது.

எனவே, பொதுமக்கள் இந்தத் தொற்றுப் பரவலில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இரண்டு விடயங்களைக் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

இயலுமானவரை ஒன்றுகூடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அதற்காக கடந்த வாரம் யாழ். மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற செயலணி கூட்டத்தின்போது பொதுமக்களின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கான பல தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதாவது முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணுதல் மற்றும் கை கழுவுதல் போன்ற சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றினால் இந்தக் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும். - என்றார்.

## ஊடகவியலாளர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இடம்பெறுமா என்ற கேள்வி நீதிக்காக குரல் எழுப்பும் ஊடக சமூகத்தினரிடையே ஏற்பட்டுள்ளது.

இலங்கை வரலாற்றில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க முழு அளவிலான ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் - என்றுள்ளது.

## பொரளை பொலிஸில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ள கொரோனா நோயாளர்கள் களுத்துறையில் அமைந்துள்ள கொவிட்-19 சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என பொரளை பொலிஸ் நிலையத்தின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் கூறினார்.

## பொம்பியோ தங்கிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயமானது ஒருவருக்கும் தெரியாத வகையில் மறைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

கொரோனா வைரஸை ஒழிப்பதற்காக மந்திரிக்கப்பட்ட பிரித் நீரை ஆற்றில் இட்டுவரும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி அதனை நிறுத்திவிட்டு முதலில் அவர் பதவி விலக வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

## ரயிலுடன் மோதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
27 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை என விசாரணைகளின் வாயிலாகத் தெரியவந்துள்ளது. உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# இந்த நியமனம் தேவைதானா?

*'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி'* என்பார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கும் குழப்பம் போதாது என்று, புதிய குழப்பம் ஒன்றை – குழப்படி ஒன்றை – ஆரம்பித்து வைத்திருக்கின்றது கூட்டமைப்புக்கென்று திடீரென ஒரு செயலாளரை நியமித்த விவகாரம்.

இன்றைய கட்டத்தில் அப்படி ஒரு நியமனம் மாவை சேனாதிராசாவுக்கு வழங்கப்பட்டமையை யாரும் சவாலுக்கு உட்படுத்தப் போவதில்லை. இங்கும் அங்குமாக அது தொடர்பில் முணுமுணுப்புகள் – அதிருப்திகள் – இருக்கலாமே தவிர, இதனால் பெரும் குழப்பம் ஒன்றும் வந்து விடப் போவதில்லை.

ஆனால், பிளந்து – பிரிந்து – வேறுபட்டு நிற்கும் தரப்புக்களை ஒன்றிணைத்து, அதில் அரசியல் செய்ய முயற்சிக்கும் மாவை சேனாதிராசாவின் எத்தனத்துக்கு இது வலுச் சேர்க்கப் போவதில்லை என்பது தெளிவு.

நாடாளுமன்றப் பதவியை இழந்து, கடன்பட்டார் நெஞ்சம் போல கலங்கி நிற்கும் தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு அரசியல் ரீதியாக இன்று தேவைப்படுவது தமிழர் தரப்பின் – தமிழ் தேசியக் கட்சிகளின் – பல்வேறு தரப்புகளையும் ஒன்றிணைத்துச் செயற்படுத்தும் அங்கீகாரம்தான்.

அதற்காக, தமது கட்சிக்கும், கூட்டமைப்புக்கும் வெளியில் முரண்பட்டு நிற்கும் தமிழ்த் தேசிய ஆதரவு சக்திகளை நோக்கி அவர் நீட்டும் கைகளைப் பலப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாடு இந்த அடிப்படையில்தான் வலுப்பெறுகின்றது.

ஆனால், அவரோ 'சாண் ஏற முழம் சறுக்கும்' வேலைகளைச் செய்து கொண்டிருக்கின்றார். அல்லது தன்னுடன் நிற்பவர்கள் என்று கூறிக் கொள்பவர்கள் அப்படி முழம் சறுக்கும் வேலைகளைச் செய்வதற்கு அனுமதித்து நிற்கின்றார். அத்தகைய நடவடிக்கையில் ஒன்றுதான் இப்போது – இவ்வளவு காலமும் இருந்துவிட்டு – இச்சமயத்தில் – நிகழ்ச்சி நிரல் முன்னறிவித்தல் கூட இல்லாத ஒரு கூட்டத்தில் வைத்துத் தம்மை தாமே தமிழ்க் கூட்டமைப்புக்குச் செயலாளராக அறிவிக்க வைத்தமை.

தாம் அரவணைத்துத் தம் பக்கத்தைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டிய தரப்புகளை தள்ளிவைக்கும் பிரதிபலனைத்தான் இந் நடவடிக்கை அவருக்குப் பெற்றுத் தரும் என்பதை அவர் காலம் கடந்துதான் உணருவார்.

தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கலந்து கொள்ளாத கூட்டத்தில் – அவர் இப்போது கல்லுப் பிள்ளையார் போல இருக்கும் ஒரு தலைவர் என்ற அர்த்தத்தைத் தரும் விதத்தில் – அவருக்கே தெரியாமல் அவரது கூட்டமைப்புக்கு ஒரு செயலாளரைத் தெரிவு செய்து அறிவிப்பது என்பதும், சம்பந்தன் அதனை எதிர்க்கார் என்று வியாக்கியானம் கூறுவதும் அபத்தம்.

நிச்சயமாக சம்பந்தன் இதனை பகிரங்கமாகவோ, உள் கூட்டங்களிலோ ஆட்சேபிக்கவோ, எதிர்க்கவோ மாட்டார். அவர் அரசியலில் பழுத்த நரித் தந்திரசாலி. அத்துறையில் நிறைகுடம். அது தழும்பாது, பார்த்திருப்பார்.

இது, எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைதான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டமைப்பு தனியாக இயங்க வேண்டும், நாடாளுமன்றக் குழு சுயாதீனமாக இயங்க வேண்டும் என்று நாமே இப்பந்தியில் பல தடவைகள் வலியுறுத்தி வந்தோம்.

2015 பொதுத் தேர்தலில் பங்காளிக் கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தோற்ற சமயத்திலும் கூட இது கூறப்பட்டது. அப்போது மாவை காதில் அது விழவில்லை.

இப்போது மாவை காதில் அது விழுந்திருக்கின்றது. மன்னிக்கவும், விழவில்லை, இப்போது அவருக்கு அது உறைத்திருக்கின்றது – அவர் தேர்தலில் தோற்று, நாடாளுமன்றத்துக்குள் புகும் எத்தனமுமும் சறுக்கி விட்டதால்.

அதற்காக கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுவுக்கு சவால் விடும் வகையில், அல்லது அதற்குப் போட்டியாக அரசியல் நடத்தும் விதத்தில், ஒரு கட்டமைப்பு ரீதியான அணியாக கூட்டமைப்பின் வழி நடத்தல் குழுவை உருவாக்குவது ஒரு கட்டத்தில் 'பூமராங்' ஆக வந்து தாக்கும் என்பதை மாவை சேனாதிராசா உணர்ந்து கொள்வது நலம்.

உள்ளூராட்சி சபைப் பிரச்சினைகளை – மாகாண ரீதியில் உள்ள சிக்கல்களை – தீர்ப்பதற்காக கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில் இத்தகைய செயலாளர் தெரிவு அவசர அவசரமாக, திடுதிப்பென செய்திருப்பது அநாவசியமானது; அர்த்தமற்றது; அவசரத்தனமானது.

இப்படி ஒரு கூட்டம் கூட்டப்பட்டதே முதலில் அதன் தலைவர் சம்பந்தனுக்குத் தெரிந்திருக்குமோ என்னவோ...?


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதவி நிலைகள், தேர்தல் ஆணையத்துடனான ஊடாட்டம், இப்போது மாவை சேனாதிராசாவைச் செயலாளராக அறிவிக்கும் தேவையை ஏற்படுத்திய சட்டவிதி பற்றி எல்லாம் தனியாக இப்பத்தியில் ஒரு தடவை பார்ப்போம்.

ஆனால், தமிழர் தரப்பைப் பலப்படுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ள இச்சமயத்தில் கூட்டமைப்புக்குள் தமக்கு முக்கியத்துவத்தைத் தேடவும், வேறு பலரை வெட்டி ஒதுக்கவும், திட்டமிட்டிருக்கும் சிலரின் நிகழ்ச்சி நிரலுக்கு இந்த விடயம் உதவியிருக்கக் கூடும்.

அது, விளங்காமல், தன்னைத்தானே தெரிவு செய்கின்றார்கள் என்ற சுய நலத்தில் அதற்குத் தலை சாய்த்து இணங்கிய மாவை சேனாதிராசா, அதன் மூலம் தமிழர் தரப்புகளை ஒன்றிக்கும் தமது முயற்சிக்குத் தாமே பின்னடைவை ஏற்படுத்துகின்றார். கூடவே இருந்து குழிபறிப் போருக்கு இடமளிக்கின்றார். அவ்வளவே.

# கொடிய கொரோனாவே, ஓடிப்போ! நீர் மந்திரித்து ஆறுகளில் கலப்பு!

## அமைச்சர்கள் மேற்கொண்டனர்



கட்டுக்கடங்காமல் பரவும் கொரோனாவை கட்டுப்படுத்த இன்று மத வழிபாடுகளில் ஈடுபடுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்று பௌத்த விகாரைகள் மற்றும் இந்து ஆலயங்களில் வழிபாடு நடத்துமாறு கேட்டுள்ளார்.

இதற்குள், நேற்று நாட்டின் முக்கிய கங்கைகளில் மந்திரிக்கப்பட்ட தண்ணீரை அமைச்சர்கள் கலந்து வழிபாட்டில் ஈடுபட்டனர்.

பிரதமரின் மருத்துவர் என கூறும் எலியந்த வைட் வழங்கிய மந்திரிக்கப்பட்ட தண்ணீர் பானைகளை அமைச்சர்கள் பவித்ரா வன்னியாராச்சி களு கங்கையிலும், பிரசன்ன ரணதுங்க, உதய கம்மன்பில ஆகியோர் களனி கங்கையின் வெவ்வேறு இடங்களிலும் தண்ணீரை கலந்தனர்.

இதேபோல நாட்டின் பல பகுதிகளிலுள்ள கங்கைகளில் மந்திரிக்கப்பட்ட தண்ணீரை கலக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எலியந்த வைட் உலகளவில் பிரபலமான வைத்தியர் ஆவார். சச்சின் டெண்டுல்கர், முத்தையா முரளிதரன் ஆகியோர் அவரிடம் சிகிச்சை பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீலங்கா இனஸ்ரன்ஸ் ஊழியருக்குக் கொரோனா யூனியன் பிளேஸ் கிளை அலுவலகத்துக்கு பூட்டு!

ஸ்ரீலங்கா இன்சூரன்ஸின் யூனியன் பிளேஸ் அலுவலகத்தை சேர்ந்த ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனம் இதனை அறிவித்துள்ளது. மேலும், அவருடன் நெருங்கிய தொடர்பைப் பேணியவர்களை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் மறு அறிவித்தல் வரை அந்த அலுவலகம் மூடப்பட்டிருக்கும் என ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. இதேவேளை, பொரளை பொலிஸ் நிலையத்தில் மேலும் 8 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 10 பேரில் 8 பேருக்கு இவ்வாறு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# இரண்டு மணி நேரங்கள் மட்டுமே நாளை நாடாளுமன்றமன்று கூடும்!

நாடாளுமன்றம் நாளை இரண்டு மணி நேரம் மட்டுமே கூடவுள்ள நிலையில், இதன்போது சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் இரண்டு புதிய விதிமுறைகளை முன்வைப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை மட்டுமே நாடாளுமன்றம் கூடும் என்றும் இதன்போது சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் இரண்டு விதிமுறைகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் நாடளுமன்றப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாடாளுமன்ற அலுவல் பற்றிய குழு கூடவுள்ளது.

இதன்போது 2 மற்றும் 3 ஆவது வாசிப்பைத் தொடர்ந்து 2020 ஆம் நிதியாண்டுக்குரிய சேவை செலவினங்களுக்காக நிதி அமைச்சர் சமர்ப்பித்த நிதி ஒதுக்கீட்டுப் பிரேரணையை அடுத்த மாதம் 12 ஆம் திகதி நிறைவேற்றுவதாக சபாநாயகர் தீர்மானித்துள்ளார்.

அதேவேளை, நாடாளுமன்ற அமர்வு இடம்பெறும் தினத்தன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள், அழைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தவிர வேறு எவரும் நாடாளுமன்றத்துக்குச் செல்ல அனுமதி கிடையாது. ஊடகவியலாளர்களுக்கும் அனுமதி இல்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

# மாணவர்களுக்கு இணையவழி கல்வி வழங்க நடவடிக்கை

கொழும்பு, நவ.02

முன்னர் திட்டமிட்டபடி நவம்பர் 9 ஆம் திகதி மூன்றாம் தவணைக் கல்வி நடவடிக்கைக்காக பாடசாலைகளை மீண்டும் திறப்பது தொடர்பாக இறுதி முடிவு இந்த வார இறுதியில் எட்டப்படும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இன்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர், பாடசாலைகளை மீண்டும் திறப்பது தொடர்பான முடிவை எட்டுவதற்கு முன்னர் அது தொடர்பாக ஆழமாக சிந்தித்து செய்யப்பட வேண்டும் என கூறினார்.

அத்தோடு பாடசாலை மாணவர்களின் சுகாதார பாதுகாப்பு மிக முக்கியமானது என்றும் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் குறிப்பிட்டார்.

மாணவர்கள் கல்வியைப் பெறுவதை உறுதி செய்ய, தேவை ஏற்படின் மாணவர்களுக்கு இணைய வழி கல்வியை வழங்கவும் தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

# திருகோணமலையில் வைத்தியருக்கு கொரோனா!

திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியரொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜகத் விக்ரமரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

அந்த வைத்தியர், விடுமுறைக்காக சென்று கடந்த 27ஆம் திகதி வைத்தியசாலைக்கு வருகை தந்தார். அதனைத் தொடர்ந்து, அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகள் தற்பொது கிடைக்கப்பெற்றுள்ளன. அதில், அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு, கொட்டாஞ்சேனை பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர். இவர், திருகோணமலை பொது வைத்தியசாலையில் 5 ஆம், 6 ஆம் வார்ட்டில் கடமையாற்றியும் உள்ளார்.

இந்நிலையில், இந்த வைத்தியரை ஐனுர் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளோம். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.



## பிரான்ஸிலிருந்து மேலும் 3 ரபேல் விமானங்கள் 4 இல் இந்தியாவுக்கு!

பிரான்ஸில் இருந்து மேலும் மூன்று ரபேல் விமானங்கள் நாளைமறுநாள் இந்தியா வந்து சேர்கின்றன.

இஸ்திரேஸ் விமானப் படைத்தளத்தில் இருந்து புறப்படும் இந்த விமானங்கள் இடையில் எங்கும் நிற்காமல் எட்டு மணி நேரத்தில் ஜாம் நகரை வந்தடையும்.

நடுவானில் எரிபொருளை நிரப்பவும் பாதுகாப்பு தரவும் ரபேல் விமானங்களுடன் பிரான்ஸ் விமானப்படை விமானங்கள் அணிவகுக்க உள்ளன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஏற்கனவே 5 ரபேல் விமானங்கள் இந்திய விமானப் படையிடம் ஒப்படைக்கப்பட்டு அவை பயன்பாட்டில் உள்ளன.

# காஷ்மீரின் அனைத்துப் பகுதியும் இந்தியாவுக்கே சொந்தமானவை!



பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு செய்துள்ள காஷ்மீரின் பகுதிகள் அனைத்தும் இந்தியாவின் ஒருங்கிணைந்த நிலப்பகுதிகள் என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் அனுரக் ஸ்ரீவாத்சவா திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

பாகிஸ்தானால் ஆக்ரமிப்பு செய்யப்பட்ட காஷ்மீரின் கில்ஜித் – பல்திஸ்தானுக்கு மாகாண அந்தஸ்து கொடுக்கப் போவதாக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் அறிவித்துள்ளார். இதற்கு இந்தியா தரப்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள அனுராக் ஸ்ரீஷ்வாத்சவா –

பாகிஸ்தானால் பலவந்தமாகவும் சட்டவிரோதமாகவும் ஆக்ரமிப்பு செய்யப்பட்ட கில்ஜித் – பல்திஸ்தானை உள்ளடக்கிய லடாக் மற்றும் ஜம்மு – காஷ்மீர் முழுவதும் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதிகள் தான்.

ஆக்ரமிப்பு பகுதிகளில் அதிகாரம் செலுத்த பாகிஸ்தானுக்கு எந்த வித உரிமையும் இல்லை. கடந்த 70 ஆண்டுகளாக ஆக்ரமிப்பு பகுதிகளில் வாழும் மக்களுக்கு எந்த வித அடிப்படை உரிமைகளையும் பாகிஸ்தான் வழங்கவில்லை. பாகிஸ்தான். இராணுவத்தின் பலவந்தத்தால் அங்கு மனித உரிமைகள் நசுக்கப்படுகின்றன. – எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்துக்கள், சீக்கியர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினர் மீது இராணுவ அடக்குமுறைகளும் மனித உரிமை மீறல்களும் நடைபெறுகின்றன என ஐ.நா. மனித உரிமைக் குழுவிடம் இந்தியா முறைப்பாடு அளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




# ஜம்மு - காஷ்மீர் பகுதியில் 3.2 அலகில் நில நடுக்கம்!

ஜம்மு - காஷ்மீரில் இன்று காலை (திங்கட்கிழமை) ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக அந்தப் பகுதியில் உள்ள கட்டடங்கள் குலுங்கின என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜம்மு காஷ்மீரில் 6.54 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. ஹன்லி பகுதியில் இருந்து வடமேற்கில் 51 கி.மீ தொலைவில் உணரப்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 3.5 அலகாகப் பதிவாகியிருந்ததாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கின எனவும், எனினும் பாதிப்புகள் தொடர்பாக எந்தத் தகவலும் வெளியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கொரோனாப் பரிசோதனை 11 கோடியைத் தாண்டியது!

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றைக் கண்டறிவதற்காக நேற்று மட்டும் 8 லட்சத்து 55 ஆயிரம்; மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன என ஐ.சி.எம்.ஆர் தெரிவித்துள்ளது.

இதன்படி நேற்று வரை மட்டும் 11 கோடியே 7 லட்சத்து 43 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 82 லட்சத்து 29 ஆயிரமாக உயர்ந்துள்ளது. இதுவரை 75 லட்சத்து 44 ஆயிரம்; பேர் பாதிப்பில் இருந்து மீண்டுள்ளனர். புதிய நோய்த்தொற்றும் படிப்படியாகக் குறைந்து வருகிறது.

அதேசமயம் கொரோனா தொற்றை விரைவாகக் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்கு ஏதுவாகப் பரிசோதனைகள் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## இந்திய எல்லையைத் தொட்டு புதிய ரயில் பாதை அமைக்கவுள்ளது சீனா!



சிச்சுவான் – திபெத் தடத்தில் ரயில் பாதையை அமைக்க சீனா திட்டமிட்டுள்ளது.

இந்த ரயில்பாதை இந்திய எல்லை அருகே அமைய உள்ளது. இரண்டு சுரங்கங்கள், ஒரு பாலம் ஆகியவற்றுடன் இதற்கான கட்டுமானப் பணிகளைத் தொடங்க உள்ளதாக ஆளும் சீன கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்துள்ளது.

இந்தப் பகுதி இந்தியாவின் அருணாசலப் பிரதேசம் அருகே வந்து நிறைவடையும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இது சீனா அறிவித்துள்ள இரண்டாவது ரயில் பாதையாகும்.

இந்த தடத்தில் சுற்றுலாவை வளர்க்க சீனா விரும்புகிறது என்று கூறப்பட்டாலும் எல்லையை படைகள் விரைவில் அடைய இந்தியா சாலைகளைக் கட்டி வரும் நிலையில் சீனா பதிலுக்கு ரயில்பாதையை எல்லை அருகே அமைத்து வருவதாகக் கூறப்படுகிறது.

## மொத்தத் தொற்றாளர் எண்ணிக்கை இந்தியாவில் 82 லட்சம் கடந்தது!

இந்தியாவில்கொரோனாத் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கைகடந்தசிலநாள்களாக இறங்குமுகத்தில் செல்கிறது. இருப்பினும் மொத்த பாதிப்பாளர்களின் எண் ணிக்கை 82 லட்சத்தைக்கடந்துள்ளது.

அந்தவகையில்நேற்று (ஞாயிற்றுக்கிழமை) 46 ஆயிரத்து 441பேர்புதிய தொற்றாளர்களாகஅடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்துபாதிக்கப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 82 லட்சத்து 29 ஆயிரத்து 322 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 493 பேர் உயிரிழந்துள்ள நிலையில், உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 22 ஆயிரத்தைக் கடந்துள்ளது. குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 75 லட்சத்து 42 ஆயிரத்தைக் கடந்துள்ளதுடன் 5 லட்சத்து 63 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாகத்தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகள் விபரம்
பிறந்த திகதி – 1988.04.03
மதம் – இந்து V
நட்சத்திரம் – சித்திரை 4
பாவம் – 11
கல்வி – பட்டதாரி
தொழில் – கனடா PR
எதிர்பார்ப்பு – படித்த அழகான பெண்.

மணமகள் விபரம்
பிறந்த திகதி – 1998.10.10
மதம் – இந்து V
நட்சத்திரம் – அச்சுவினி
பாவம் – 28
கல்வி – பட்டதாரி
எதிர்பார்ப்பு – பட்டதாரி அரச உத்தியோக மணமகன்.

Kalyanamalai Vada.com இணைய முகநூலிலும், எமது காலைக்கதிர் பத்திரிகையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள். முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம், சந்தை வீதி, இலையாணன் மேற்கு, உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

# பங்களாதேஷ் பிரஜைகள் 15 பேர் மகாராஷ்டிராவில் கைதாகினர்!

மகாராஷ்டிரா மாநிலத்தில் உரிய ஆவணங்கள் இன்றி சட்டவிரோதமாகக் குடியேறிய பங்களாதேஷ் பிரஜைகள் 15 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மும்பையின் நயா நகர் பொலிஸ் எல்லைக்கு உட்பட்ட மீரசாலை ஸ்கைவோக் பகுதியில் வைத்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அசாம் மாநிலத்தில் சட்டவிரோதமாகக் குடியேறிய பங்களாதேஷ் பிரஜைகளைக் கண்டறியும் வகையில் தேசிய குடிமக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டது.

இதனால், பங்களாதேஷில் இருந்து இந்தியாவுக்குள்



சட்டவிரோதமாக நுழைந்தவர்கள் பலர் நாட்டின் பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களோடு மக்களாக மறைந்து வாழ்ந்து வருகின்றனர். அவர்களைக் கண்டுபிடிக்கும் வகையில் குடியுரிமை திருத்தச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நாளை சூடு பிடிக்கும் இறுதிக்கட்டப் பிரசாரம்!

அமெரிக்காவில் நாளை (செவ்வாய்க்கிழமை) ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், ஜனாதிபதி வேட்பாளரான ரொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஜோ பிடன் ஆகிய இருவரும் இறுதிக்கட்ட பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடுகளில் ஒன்றாக விளங்கும் அமெரிக்காவில் நாளை (செவ்வாய்க்கிழமை) ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ளது.

கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் நடைபெறும் இந்தத் தேர்தல் சர்வதேச அளவில் பெரும் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து ஜனநாயக கட்சி சார்பில் முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பிடன் களமிறங்குகிறார்.

கொரோனா வைரஸ், இனப்பாகுபாடு ஆகிய விவகாரங்கள் இந்தத் தேர்தலில் முக்கிய பிரச்சினைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.



கொரோனா அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தேர்தல் நடந்தாலும் கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் அமெரிக்க மக்கள் இந்தத் தேர்தலில் வாக்களிப்பதற்கு மிகுந்தஆர்வம் காட்டிவருகின்றனர்.

அந்தவகையில் 8 கோடியே 50 லட்சம் பேர் முன்கூட்டியே தங்கள் வாக்கைச் செலுத்தினர். அதைப்போல் தேர்தல் நாளன்று இதுவரை இல்லாத அளவுக்கு அதிக எண்ணிக்கையில் வாக்குகள் பதிவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தநிலையில் தேர்தலுக்கு இன்னும் ஒரு நாளே இருக்கும் நிலையில் ஜனாதிபதி வேட்பாளர்களான ட்ரம்ப் மற்றும் ஜோ பிடன் ஆகிய இருவரும் இறுதிக்கட்ட பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

அந்த வகையில் தேர்தலில் வெற்றியை தீர்மானிப்பதில் முக்கிய மாகாணமாக விளங்கும் பென்சில்வேனியாவில் 4 பிரசார பேரணிகளில் ஜனாதிபதி ட்ரம்ப் கலந்துகொண்டு தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டார்.

அதேபோல் மற்றொரு முக்கிய மாகாணமான மிச்சிகனில் ஜனநாயக கட்சி வேட்பாளர் ஜோ பிடன் 2 பிரசார பேரணிகளில் பங்கேற்றார். இந்தப் பேரணிகளில் முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவும் கலந்துகொண்டு ஜோ பிடனுக்கு ஆதரவாக பிரசாரம் செய்தார்.

ஜோ பிடனின் பிரசார பேரணிகள் மிக சிறிய அளவிலும், சமூக இடைவெளி கடைப்பிடிக்கப்பட்டும் நடந்தன. ஆனால் ஜனாதிபதி ட்ரம்பின் பிரசார பேரணிகள் மிக பிரமாண்டமாகவும் சமூக இடைவெளி உள்ளிட்ட கட்டுப்பாடுகள் இன்றியும் நடைபெற்றன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

## உலக சுகாதார அமைப்பினது தலைவரும் தனிமைப்படுத்தலில்!



உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானம் கப்ரியேசுஸ் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்பட்டுள்ளார் எனவும், வீட்டிலிருந்தே தனது பணிகளை மேற்கொள்கிறார் எனவும் அறிவித்துள்ளார்.

தன்னுடன்தொடர்பைப்பேணிய ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்து அவர் இவ்வாறு சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக தனது உத்தியோகபூர்வ சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ள அவர், தான் அறிகுறிகள் ஏதுமற்று உள்ள அதேவேளை நலமுடன் இருக்கிறார் எனத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர் –

நாம் அனைவரும் சுகாதாரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு இணங்கி நடக்க வேண்டியமை அவசியம் என வலியுறுத்தியுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக உலகின் பல்வேறு நாடுகளின் அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள் ஏற்கனவே பாதிப்பிற்குள்ளாகிய நிலையில் உலக சுகாதார அமைப்பின் தலைவருக்கு ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜோர்ஜியத் தேர்தலில் ஆளுங்கட்சி முன்னிலை!

### எதிர்க்கட்சி போராட்டத்துக்கு அழைப்பு

ஜோர்ஜியாவில் நடைபெற்று முடிந்துள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் ஜோர்ஜிய ட்ரீம் கட்சி 50 வீத வாக்குகளுடன் முன்னிலை பெற்றுள்ளது.

தேர்தல் நேற்றுமுன்தினம் நடைபெற்றதுடன், இதன் ஆரம்ப முடிவுகள் தற்போது வெளியாகியுள்ளன.

இந்நிலையில் இந்த முடிவுகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அதை எதிர்க்கத் திட்டமிட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சி நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அறிவித்துள்ளது.

இந்த தேர்தல் முடிவுகள் நடுநிலையானவையாக இருக்கவில்லை என எதிர்க்கட்சி குறிப்பிட்டுள்ளது.

மத்திய தேர்தல் ஆணையகத்தின் முதற்கட்ட முடிவு அறிவிப்பின்படி, ஜோர்ஜிய ட்ரீம் கட்சி 50.58 சதவீத வாக்குகளையும் பிரதான



எதிர்க் கட்சியான ஐக்கிய தேசிய இயக்கம் 24.92 சதவீத வாக்குகளையும் பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், அரசாங்கத்தை அமைப்பதற்குத் தேவையான வாக்குகளை ஆளும் கட்சி பெறுமா என்பது இன்னும் உறுதியாகவில்லை.

## பிலிப்பைன்ஸை தாக்கியது சூறாவளி; 16 பேர் உயிரிழப்பு!





பிலிப்பைன்ஸை தாக்கிய கோனி சூறாவளியால் இதுவரை 16 பேர் உயிரிழந்துள்ளமையோடு, 7 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தங்கள் வாழ்விடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

இதேவேளை மூன்று பேர் காணாமல் போயுள்ளார்கள்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் லூசன் தீவு மாகாணத்தின் பிகோல் பிராந்தியத்தில் உள்ள கேடான்டுவானஸ் மற்றும் அல்பேவில் கோனி சூறாவளி கரை கடந்தது.

இதனால் மணிக்கு 310 கிலோ மீற்றர் வேகத்தில் சூறாவளி காற்று வீசியது. காற்றின் தாக்கத்தால் மின்கம்பங்கள் முறிந்து விழுந்தன. வீடுகளின் மேற்கூரைகள் தூக்கி வீசப்பட்டன.

சூறாவளியின் தாக்கத்தால் பல்வேறு இடங்களில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

அல்பே மாகாணத்தில் உள்ள மயோன் எரிமலையில் பாறைகள் உருண்டு விழுந்ததில் 300 இற்கும் மேற்பட்ட வீடுகள் முற்றிலும் சேதமடைந்தன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 3 லட்சத்து 90 ஆயிரம் பேர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் 3 லட்சத்து 45 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

கோனி சூறாவளி காரணமாக ஒரு கோடியே 90 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று பிலிப்பைன்ஸின் தேசிய பேரிடர் அமைப்பு தெரிவித்துள்ளது. குறித்த ஒரு கோடியே 90 லட்சம் மக்களும் நிலச்சரிவுகள், வெள்ளம், புயல் மற்றும் ஓர் எரிமலை வெடிப்பு போன்ற ஆபத்துகள் நிறைந்த பகுதிகளில் உள்ள இடங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கியூஸோன் மாகாணத்தில், சூறாவளியால் மரங்கள் சரிந்து வீழந்தமையால் 10 நகரங்களில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது. இந்நிலையில், ஒரு வாரத்திற்கு முன்னர் பிலிப் பைன்ஸை தாக்கிய மொலேவ் சூறாவளியால் 23 உயிரிழந்தமையோடு 39 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## போகோ ஹறாமினரின் தாக்குதலில் நைஜீரியாவில் 13 பேர் பலியாகினர்!



நைஜீரியாவின் வடகிழக்குப் பகுதியில் போகோ ஹறாமினர் நடத்திய தாக்குதலில் குறைந்தது 13 பேர் உயிரிழந்தமையுடன், மேலும் 6 பேர் கடத்தப்பட்டுள்ளனர் என அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளது.

நைஜீரியாவின்வடகிழக்குபோர்னோமாநிலத்தில் அமைந்துள்ள டாகுலாாே கிராமத்திலேயே தீவிரவாதிகள் இந்தத் தாக்குதலை நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுத்துள்ளனர்.

தாக்குதலின் விளைவாக முழுக் கிராமமும் அழிக்கப்பட்டுள்ளமையுடன், கால்நடைகளும், பண்ணை விளைபொருள்களும் கொள்கையடிக்கப்பட்டுள்ளன.

அத்துடன்ஆறு பேர்கடத்திச்செல்லப்பட்டுள்ளனர் எனவும், 13 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

2008 ஆம் ஆண்டு முதல் நைஜீரியாவில் கால்நடை வளர்ப்போர் மற்றும் விவசாயிகளுக்கு எதிராகத் தீவிரவாதிகளின் வன்முறை பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# இலங்கை அரசு தமிழர்களிடமே பொறுப்புக்கூறல் செய்யவேண்டும்!

## சர்வதேசத்திடமல்ல என்கிறது ஜனநாயகப் போராளிகள் கட்சி

இலங்கை அரசாங்கம் தமிழர்களிடமே பொறுப்புக் கூறலைச் செய்யவேண்டுமே தவிரவும் சர்வதேசத்திடம் அல்ல என்று ஜனநாயக போராளிகள் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

தமிழர்கள் இலங்கையில் ஆயுத ரீதியாகப் பலம்பெற்றிருந்தபோது இனப்பிரச்சினை தொடர்பாக காத்திரமாக செயலாற்றிய சர்வதேச நாடுகள் 2009 போரின் இறுதியில் லச்சக்கணக்கான மக்கள் போர்வலயத்தில் அகப்பட்டு நிர்க்கதிக்குள்ளாகி கொல்லப்படும்போது ஏன் அர்த்தமுள்ள வகையில் செயற்பட்டு எமது மக்களையாவது பாதுகாப்பாக மீட்டெடுக்கும் மனிதாபிமான சர்வதேச சட்டங்களைப் பயன்படுத்தாமல் போனதற்கான காரணிகளை ஐக்கியநாடுகள் சபையும் சர்வதேச நாடுகளும் இப்போதாவது வெளிப்படுத்த வேண்டுமென மிக மோசமான போரவலத்தை சந்தித்தவர்கள் என்கின்ற உரித்துடன் கேட்டு நிற்கின்றோம்.

இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கை அரசுக்கும் தமிழ்மக்களுக்குமிடையில் முகிழ்ந்த இன முறுகலைத் தமது பிராந்திய நலன் சார்ந்து பயன்படுத்திய பிராந்திய சக்திகள் விடுதலை உணர்வோடு தமது புத்தகப்பைகளை வீசி எறிந்துவிட்டு புறப்பட்ட இளையோர்களை பிரிவினைக்கு உட்படுத்தி பல்வேறு குழுக்களாக்கி அவர்களுக்கு சிறியரக ஆயுதப்பயிற்சியை வழங்கி அனுப்பிவைத்தது. அதுவும் வழங்கப்பட்ட ஆயுத் தபயிற்சிகளால் சிறு சிறு கிளர்ச்சிகளை ஏற்படுத்தலாமே தவிர ஒரு நாட்டை பிளவுபடுத்தி இன்னொரு நாட்டை உருவாக்கும் வல்லமைகொண்ட பயிற்சிகளோ ஆயுதங்களோ வழங்கப்படவில்லை. இதன் நிலைமைகளை தமிழர்கள் உணரத்தலைப்பட்டபோது காலம் மிகமோசமாகக் கடந்திருந்தது.

எமது கைகளில் யார் ஆயுதத்தை வழங்கினார்களோ அவர்களாலேயே நாம் அழிக்கப்படுவோம் என்பதை உணர்ந்த தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு தம்மை சுயாதீனமான வல்லமை உள்ள விடுதலை அமைப்பாக வளர்த்தெடுத்தது அதுவரை பிராந்திய வலயத்துக்குள் முடக்கப்பட்ட தமிழ்மக்களது இனப்பிரச்சினை தமிழ்மக்களது அளப்பெரிய தியாகங்களால் சர்வதேச மயப்படுத்தப்பட்டது.

தனது பிராந்திய நலன்களை மட்டுமே அடிப்படையாகக்கொண்டு சுயநலமாகச் செயலாற்றிய பிராந்திய அரசு, தமிழர்களது பிணக்கு, இலங்கை மீதான ஆதிக்கம் தன்கையைமீறி சென்றுவிட்டமையை உணர்ந்து அதற்கெதிராக சதுரங்கமாடத் தொடங்கியது. அவர்களது கபட ஆட்டம் இற்றைவரை தனது நண்பன் யார் எதிரி யார் என்று தெரியாமல் தொடர்கிறது.

சர்வதேச மயப்படுத்தப்பட்ட தமிழர்களது உரிமைப் போராட்டம் கூட ஒடுக்கப்படுகின்ற ஒரு பூர்வீக இனக் குடிகளின் உரிமைப்போராட்டமாக வகைப்படுத்தப் படாமல் ஐக்கியநாடுகளின் சர்வதேச நியமன சட்ட வரைவுகளின்படி ஆராயப்படாமல் பூகோள அரசியல் பரப்புக்குள் அகப்பட்டு சிந்தப்பட்ட இரத்தங்களுக்கும் அழிக்கப்பட்ட உயிர்களுக்கும் நியாயபூர்வமான எவ்வித அணுகுமுறைகளும் இன்றி தூக்கி வீசப்பட்டமையே வரலாறு.

ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்கச்சொன்னால் முடவனுக்குக் கோபம் என்பது போல தமிழ் அரசியல் தலைவர்களால் கையாளப்பட்ட பிராந்திய சர்வதேச கையாளுகைகள் அனைத்தும் முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் உச்சத்தில் கூட பயனளிக்கவில்லை என்பதே ஐதார்த்தம்.

இந்தச் சூழமைவில் தோல்வியில் இருந்து நாம் கற்றுக்கொள்ள போகின்றோமா அல்லது மீண்டும் மீண்டும் தோல்வி அடைவதைக் கற்றுக்கொள்ளப் போகின்றோமா என்பதே கேள்வி.

1952 ஆண்டு நடைபெற்ற இரண்டாவது நாடாளுமன்றத் தேர்தலில் சம;டி கோரிக்கையை வைத்து தமிழரசுக்கட்சி போட்டியிட்டிருந்தது. அதுவே சுதந்திர இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியின் ஆரம்பப் புள்ளியாகும். கடந்த 68 வருடகால முயற்சிகள் எந்த பலனையும் தரவில்லை இனப்பிரச்சினை காலதத்துக்குக் காலம் புதிய பரிணாமம் பெற்று வளர்ந்திருக்கிறதே தவிர அதனை வலுவிழக்கச்செய்யும் சாத்தியமான முனைப்புகளைத் தமிழர் தரப்பு காட்டவில்லை என்பதும் நிஜம்.

சர்வதேசம் கை கொடுக்காவிட்டால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு இல்லையா? இருக்கிறது அதன் அளவுகோள் என்ன அதனை எவ்வாறு சாத்தியமாக்குவது



எவ்வகையில் சென்றடைவது. இவை அனைத்துக்கும் இருபதாவது திருத்தம் எவ்வகையில் வலுச்சேர்த்திருக்கிறது. என்பதை சட்ட மேதைகளுடன் விவாதிக்காமல் எமது மக்களுடன் பேசுங்கள் அவர்களுக்கு தெரியும் சாத்தியமானது எது என்று. எமக்கான தீர்வு எமக்குள் உருவாகாதவரை வலுவற்ற இனக்குழுமமாகவே நோக்கப்படுவோம்.

தமிழர்களது நியாய பூர்வமான விடுதலைப் போராட்டத்தை சர்வதேச சக்திகளோடு சேர்ந்து முடிவுக்குக் கொண்டுவந்த ஆட்சியாளர்களே தற்போதும் சர்வ வல்லமையோடும் அரியனை ஏறியிருக்கிறார்கள்.

அந்த சர்வ வல்லமை பெற்ற தரப்பினராலேயே இலங்கையில் சுய உரித்தோடு சமதர்மமாக வாழத்தகுதியான தீர்வை வழங்க முயற்சிக்க வேண்டும். மீளவும் கொன்றொழிக்கப்பட்ட தமிழினத்தின் தியாகங்களில் ஏறி நின்று பிராந்திய சர்வதேச சக்திகள் செயலாற்ற முனைகின்றமையை நாம் நிராகரிக்கின்றோம். நாங்கள் அஹிம்சை ரீதியாகவும் ஆயுதமேந்தியும் போரிட்டது எமது மக்களுக்காகவே தவிர பிராந்திய சர்வதேச நலன்களுக்காக அல்ல என்பதைத் தமிழ் அரசியல் தலைமைகள் புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டும் இந்தத் தருணத்தில் இதனைச் செய்ய தவறுவோமாக இருந்தால். எதிர்காலத்தில் தமிழர்களுக்குப் பிரச்சினைகள் இருக்கும். அதை எதிர்கொள்ளத் தமிழர்கள் இருக்க மாட்டார்கள். - என்றுள்ளது.

# மக்கள் ஆதரவை எதிர்காலத்திலும் பொதுஜன பெரமுன நிச்சயம் பெறும்!

## அந்தக் கட்சியின் தவிசாளர் பீரிஸ் இமாலய நம்பிக்கை

குறுகிய காலத்துக்குள் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மக்களாணையை முழுமையாகப் பெற்றுள்ளது. மக்களின் ஆதரவை எதிர்காலத்திலும் பொதுஜன பெரமுன பெறும் என கட்சியின் தவிசாளர் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் 4 வருட நிறைவையொட்டி அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -.

2015ஆம் ஆண்டு பல்வேறு நோக்கங்களை அடிப்படையாக கொண்டு ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. அரசியல் ரீதியில் பெரும்பாலானோர் தனித்து விடப்பட்டார்கள்.

ராஜபக்ஷர்களின் ஆட்சி நாட்டுக்கு அவசியம் என நாட்டு மக்கள் எதிர்பார்த்தார்கள். அனைவரது அபிலாஷைகளைக் கருத்திற் கொண்டு பஸில் ராஜபக்ஷ 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் திகதி தாமரை மொட்டு சின்னத்தில் ஸ்ரீணலங்கா பொதுஜன பெரமுன கட்சியை ஸ்தாபித்தார்.

2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மக்களின் அரசியல் தீர்மானம் வெளிப்பட்டது. கட்சியை உருவாக்கி குறுகிய காலத்துக்குள் 71 ஆசனங்கை கைப்பற்றுகின்றமை சாதாரண விடயமல்ல.

அதனை தொடர்ந்து 2019 நவம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றி இரட்டிப்பானது. சுமார் 69 லட்சம் மக்கள் ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ஷவுக்கு ஆட்சியதிகாரத்தை வழங்கி பலமான அரச நிர்வாகத்தை உருவாக்கினார்கள்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கமசமக பிலிசதர, சுபீட்சமான எதிர் காலம் ஆகிய கொள்கை அடிப்படையில் செயற்பட்டமையால் இடம் பெற்று முடிந்த பொதுத் தேர்த லில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெற்றுக் கொண்டது.

குறுகிய காலத்தில் பொதுஜன பெரமுன மக்களாணையை முழுமையாகப் பெற்றுக் கொண்டுள்ளது. இது எதிர்காலத்திலும் பாதுகாக்கப்படும்.

# தீயணைப்பு வீரர்கள் ஐவருக்கு கொரோனா!

கொழும்பு தீயணைப்பு மற்றும் மீட்புப் பிரிவில் ஐந்து பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதனையடுத்து, அவர்களுடன் தொடர்புடையவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை கொழும்பு நகராட்சியிலிருந்து பதிவான அனைத்து கொரோனா நோயாளர்களும் சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் பதிவான ஆயிரத்து 767 கொரோனா நோயாளர்களில் ஆயிரத்து 635 பேர் மினுவங்கொடை மற்றும் பேலியகொட கொத்தணிப் பரவலுடன் தொடர்புடையவர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

# மினுவாங்கொடை கொத்தணி 29 நாள்களில் 7 ஆயிரத்துக்குமேல் கொரோனா தொற்றாளர்!

மினுவாங்கொடை ஆடை தொழிற்சாலையில் ஒக்ரோபர் 3 ஆம் திகதி முதலாவது தொற்றாளர் இனங்காணப்பட்டதன் பின்னர் இந்த மாதத்தில் மாத்திரம் 7 ஆயிரத்து 185 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

அதற்கு முன்னர் கடந்த ஜனவரி இலங்கையில் முதலாவது தொற்றாளராக சீனப் பெண்ணொருவர் இனங்காணப்பட்டதன் பின்னர் ஒக்ரோபர் 2 ஆம் திகதி வரையான சுமார் 9 மாத காலப்பகுதியில் நாட்டில் மொத்த தொற்றாளர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 382 ஆகவே காணப்பட்டது.

எனினும் ஒக்ரோபர் 3 ஆம் திகதியிலிருந்து 31 ஆம் திகதி வரையான 29 நாள்களில் அந்த எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்துள்ளது. மினுவாங்கொடை இனங்காணப்பட்ட முதல் நாள் தொடக்கம் மாத இறுதி வரை இனங்காணப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கைகளை கொவிட் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் வெளியிட்டுள்ளது. அதற்கமைய,

ஒக்ரோபர் 3 - 1, ஒக்ரோபர் 4 - 1, ஒக்ரோபர் 5 - 101, ஒக்ரோபர் 6 - 729, ஒக்ரோபர் 7 - 202, ஒக்ரோபர் 8 - 19, ஒக்ரோபர் 9 - 30, ஒக்ரோபர் 10 - 103, ஒக்ரோபர் 11 - 121, ஒக்ரோபர் 12 - 90, ஒக்ரோபர் 13 - 194, ஒக்ரோபர் 14 - 130, ஒக்ரோபர் 15 - 68, ஒக்ரோபர் 16 - 110, ஒக்ரோபர் 17 - 115, ஒக்ரோபர் 18 - 61, ஒக்ரோபர் 19 - 87, ஒக்ரோபர் 20 - 180, ஒக்ரோபர் 21 - 166, ஒக்ரோபர் 22 - 309, ஒக்ரோபர் 23 - 865, ஒக்ரோபர் 24 - 368, ஒக்ரோபர் 25 - 348, ஒக்ரோபர 26 - 541, ஒக்ரோபர் 27 - 457, ஒக்ரோபர் 28 - 335, ஒக்ரோபர் 29 - 582, ஒக்ரோபர் 30 - 633, ஒக்ரோபர் 31 - 239 என 7185 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.11.2020 இல் வெளியிடப்பெற்றது.